**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **உய்யாராணி** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**1.4.2024 OS No. 69 /2019 வா.சா.1 உய்யாராணி ஆஜர்**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

1. நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1 -ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். கூடுதல் பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். கூடுதல் பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ஏற்கனவே பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யும்போது சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலரின் 5.12.2022ம் தேதியிட்ட உத்தரவு வா.சா.ஆ.53 ஆகவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை WP(MD)No.21540/2016 வா.சா.ஆ.54 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2) 25.10.1923-ம் தேதியிட்டு சேவுகன் செட்டியார் முகமது காதியார் ராவுத்தருக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(ஒத்தி ஆவணம் வா.சா.ஆ.55 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 17.9.1957-ம் தேதியிட்டு சேதுவேல் செட்டியார் வகையறா திருப்புவனம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்த வாடகை ஒப்பந்த ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வாடகை ஒப்பந்த ஆவணம் வா.சா.ஆ.56 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 14.7.1965-ம் தேதியிட்டு சேதுவேல் செட்டியார் வகையறா திருப்புவனம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யாத வாடகை ஒப்பந்த ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(மேற்படி ஆவணம் இணை காரணங்களுக்காக குறியீடு செய்யப்படுவதாக வாதி தரப்பு வழக்கறிஞர் கூறியதால் வாடகை ஒப்பந்த ஆவணம் வா.சா.ஆ.57ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.86/1968 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை வா.சா.ஆ.58ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சிவகங்கை இந்துசமய அறநிலைய இணைஆணையர் எம்பி.எண்.2/92/சி2-வில் 20.4.1999-ம் தேதியிட்டு பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு வா.சா.ஆ.59 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சிவகங்கை இந்துசமய அறநிலைய இணைஆணையர் எம்பி.எண்.5/2021-ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு வா.சா.ஆ.60 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4) சிவகங்கை இந்துசமய அறநிலைய இணைஆணையர் எம்பி.எண்.8/2021-ல் பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு வா.சா.ஆ.61 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சிவகங்கை இந்துசமய அறநிலைய இணைஆணையர் எம்பி.எண்.6/2021-ல்

பிறப்பித்த உத்தரவு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு வா.சா.ஆ.62 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.